11th August 1960]

யோசிக்கப்படுகிறது என்று. அவ்வப்பொழுது அந்தந்த நிலைமையை அனுசரித்து 'பிராபர் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் ஏற்பாடு செய்வார்கள்.

SRI T. T. DANIEL : May I know whether officers are appointed to make periodical checking to find out whether these co-operative societies are functioning properly and especially whether physical checking—not merely account checking—is actually made?

THE HON. SRI M. A. MANICKAVELU : I presume so.

SRI V. SUBBIAH : ஜில்லா சென்டிரல் ஸ்டோர்ஸ் மூலம் விநியோகம் செய்வதினால், கிராமந்திர விவசாயிகளுக்கு அகில தொடர்போ அல்லது அவர்கள் அதில் அங்கத்தினர்களாகவோ இல்லாமல் இருப்பதை முன்னிட்டு இரண்டுவித கமிஷன் ஏற்படுகிறது. ஒன்று ஜில்லா ஸ்டோர்ஸ் கமிஷன் கொடுத்து அங்கிருந்து மார்கெட்டிங் சொஸைடிகளுக்கு வருவதற்கு உள்ள வாடகை மற்ற செலவுகளும் சேர்ந்து விடுவதால் நிறைய செலவாவதை முன்னிட்டு, கிராம விவசாயிகள் தொடர்பு உள்ள மார்கெட்டிங் சொஸைடிகளிடம் விநியோகத்தை ஒப்படைப்பது பொருத்தமாக இருக்காதா என்பதை யோசிக்க வேண்டும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த இலாகா அமைச்சர் இரண்டு நாட்களில் வந்துவிடுவார்கள். அவர்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லுகிறேன்.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது சமுதாய நல திட்டப் பகுதிகளில் ஒரு சில கிராமங்களில் இருக்கிற சொஸைடிகளின் மூலம் உரம் வழங்கப்படுகிறது. எந்தெந்த கிராமங்களில் சொஸைடிகள் இருக்கின்றனவோ, அந்த சொஸைடிகளின் மூலம் அந்தக் கிராமத் தேவையை அறிந்து உரம் விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் புதிய உத்தரவு போடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயத்தையும் மனதில், கவனத்தில் வைத்துக்கொள்ளுகிறேன்.

Payment of Sivoijama for the cultivation of Government **fallow lands**

* 107 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் மார்ச் மாதம் 21-ல் 489-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி நம் மாநிலத்திலே சர்க்கார் தரிசு நிலமாகிய 1, 13, 394 ஏக்கர் நிலத்திலே சர்க்காரின் அனுமதியில்லாமல் விவசாயம் செய்து கொண்டிருக்கும் விவசாயிகளுள் எத்தனை பேர்கள் சிவாஜிமா செலுத்திக் கொண்டு வருகிறார்கள்?

[11th August 1960

(ஆ) சிவாஜிமா செலுத்திக்கொண்டு மேற்கண்ட தரிசு நிலங்களை உழுது வருபவர்களுக்குள் ஹரிஜன விவசாயிகள் எத்தனை பேர்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The public interest served by answering the questions will not be commensurate with the time and labour involved in collecting the particulars for the answer.

SRI P. G. MANICKAM : 'சிவாஜிமா' செலுத்திக்கொண்டு இந்த நிலங்கள் உழுபவர்களுடைய எண்ணிக்கையை ஜில்லா கலெக்டர் மூலம் வெகு சுலபமாகத் தெரிந்துக் கொள்ளக்கூடும். அவர்கள் கந்தாயம் செலுத்துகிற நிலங்களை அந்த ஹரிஜனங்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் கண்டிப்பாக ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு ஒரு உத்தரவு போட்டால், ஜில்லா கலெக்டர் அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்கு வழங்குவார்கள். ஆகையால் கவர்ன்மெண்டார் இது விஷயமாகத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கோருவது நிலம் தாராளமாக ஹரிஜனங்களுக்கு 'அஸைன்' பண்ணவேண்டுமென்பது. அதையெல்லாம் மனதில் வைத்து இப்பொழுது நிலம் இல்லாதவர்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு, இம்மாதிரி நிலங்களை விநியோகம் செய்ய வேண்டும் என்று இப்பொழுது ஏற்பாடாகி, அதற்காக ஸ்பெஷல் தாசில்தார், டெப்யூடி கலெக்டர் ஆகியோர்களை நியமனம் செய்து வேலை நடந்து கொண்டிருக்கிறது.

9-00 a.m. SRI M. K. SOMASUNDARAM : ஸார், இம்மாதிரிப் புறம்போக்கு நிலங்களை ஹரிஜன மக்கள் 12 வருஷங்களாக அநுபவித்து வந்திருப்பதனால், அதை அவர்களுக்கே ஜாரி பண்ணிக் கொடுக்காததற்குக் காரணம் என்ன? அது சம்பந்தமாக கலெக்டருக்கு தகுந்த உத்தரவு போட சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உத்தரவு சென்ற மாதம் கூட அனுப்பப்பட்டது.

Tamilnad Plantation Union

* 108 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to recognise the registered Tamilnad Plantation Union?

THE HON. SRI R. VENKATARAMAN : It is presumed that the Hon. Member refers to the request made by the Tamilnad Plantation Workers' Union, Valparai, for recognition of the Union by the Cinchona Department for the purpose of representing the workers of the Government Cinchona Plantations in the Anamalais. If so, the matter is under consideration of the Government.